சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.3/2025

இன்

அசல் வழக்கு எண்.53/2021

....

G. செல்வக்குமார் ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

1) K.R. நீலாவதி

2) K. பானுமதி

3) K. ராஜகுரு ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 02.06.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பா.மருது அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.செந்தில்குமரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

இந்த மனுவுடன் தாக்கல் செய்த ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாது ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அந்த ஆவணங்களை 1ம் பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்துகொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 8, விதி 1A (3) மற்றும் சிபிசி பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

இந்த மனுவில் கண்ட ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது. அவைகளை குறியீடு செய்ய இயலாத நிலையில், அந்த ஆவணங்களை மனுதாரர்

தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. ஆகவே அந்த ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்று மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிடவேண்டும்.

3. **எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம் -**

மனுவில் கண்ட ஆவணங்கள் தற்சமயம் தான் கிடைக்கப்பெற்றது என மனுதாரர் தாவா அபிடவிட்டில் தெரிவித்துள்ள நிலையில் மனுவில் கண்ட 1வது ஆவணத்தின் தேதியைப் பார்த்தால் 20.02.2021 என கண்டுள்ளது. மேற்படி தேதியும் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முந்தய தேதியாகும். பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை அனுமதிக்கப்பட்ட தேதி 08.04.2022-ம் தேதியாகும். தாவா மனு 1வது ஆவணம் 20.02.2021 -ம் தேதியே கிடைக்கப்பெற்றுவிட்டு மேற்படி ஆவணத்தையும் தற்சமயம் தான் கிடைக்கப்பெற்றது என பொய்யாக தாவா அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் மனுவானது காலதாமதத்திற்கான சரியான காரணமும் உண்மையான காரணமும் தெரிவிக்கவேண்டும் என சட்டப்பிரிவுகள் மிகத்தெளிவாக கூறும் நிலையில் மனுதாரரின் காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் காரணமா சட்டப்படியும் நியாயப் படியும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

மேற்படி ஆவணமும் 20.02.2021 -ம் தேதி ஊராட்சி செயலாளரிடம் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின்படி தாவா சொத்து சம்பந்தமாக பெறப்பட்ட தகவல் தொகுப்பு என தெரிவித்து மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்யும்போது மேற்படி ஆவணமானது வீட்டுவரி ரசீதுகளின் தொகுப்பாக உள்ளது. மேற்படி ரசீதுகளை பார்வையிடும்போது மேற்படி ரசீதுகளில் ஊராட்சி மன்ற செயலாளரோ வேறு தகவல் தரும் அதிகாரியோ கையெழுத்து செய்யவில்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி பெறப்படும் தகவல் நகல் எல்லாவற்றிலும் உண்மை நகல் என தகவல் தரும் அதிகாரி கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

ஆனால் மேற்படி ஆவணத்தில் யாருடைய கையெழுத்தும் இல்லாமல் ஜெராக்ஸ் ஆகவும் கையெழுத்தேயில்லாமல் உள்ளது. எனவே மேற்படி ஆவணமும் சட்டப்படி நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்ய முடியாது. அதேபோல் மனு 2வது ஆவணமும் தாவா வீட்டிற்கான மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை (11) என தாக்கல் செய்துள்ளதும் 11 எண்ணிக்கையும் தற்போது தான் செலுத்தப்பட்டதா அல்லது முன்பே செலுத்தப்பட்டதா அவைகள் ஏன் தற்சமயம் தான் கிடைக்கப் பெற்றது என்பதற்கான காலதாமதத்திற்கான சரியான காரணம் ஏதும் தெரிவிக்காமல் தாவா மனு 2வது ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6.** மனுதாரர் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், எனவே மேற்படி ஆவணத்தை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 20.02.2021 ம் தேதியிட்ட 1வது ஆவணம் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாக பொய்யாக கூறியுள்ளதாகவும், மேற்படி ஆவணத்தில் கையெழுத்து எதுவும் இல்லை எனவும், 2வது ஆவணம் எப்போது கிடைக்கப்பெற்றது என்ற சரியான காரணத்தை தெரிவிக்கவில்லை எனவும், மேற்படி ரசீதுகளில் ஊராட்சி மன்ற செயலாளரோ வேறு தகவல் தரும் அதிகாரியோ கையெழுத்து செய்யவில்லை எனவும் அது ஜெராக்ஸ் நகலாக உள்ளது எனவும், எனவே அவற்றை குறியீடு செய்ய இயலாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**7.** அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தற்போது தாக்கல் செய்யப்

பட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாக கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை. வழக்கின் உண்மை தன்மையை அசல் வழக்கில் தான் தீர்மானிக்க இயலும். மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஆகவே வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டு இந்த மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு ஜுன் திங்கள் 19-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.06.19 10:55:19 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy Digitally signed by R Pandy Date: 2025.06.19 10:55:28 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.03/2025 in
O.S.No.53/2021
**Draft/Fair/Order**
19.06.2025